# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1084/SCIC/2025**

திரு.க.பெரியசாமி - புகார்தாரர்
த/பெ.கணேசன் உடையார்
பிள்ளையார் கோவில் தெரு
பெரிய வடகரை அஞ்சல்-621 116
Phone:97511 01455.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
வேப்பந்தட்டை சார்பதிவகம்
பெரம்பலூர் மாவட்டம் - 621 116.

## ஆணை

| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **16.12.2024** |
|---|---|---|
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.01.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 22.01.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 20.02.2025 |
| 5. | மனுதாரரின் புகார் மனு | 27.02.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 16/12/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், வேப்பந்தட்டை சார்பதிவகம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “வேப்பந்தட்டை வட்டம், பெரிய வடகரை கிராம சர்வே நத்தம் எண்.313/5, 317/4, 317/6, 472/3, 312/9 ஆகியவற்றிற்கு 01/11/1975 முதல் 12/2024 வரையுள்ள காலங்களுக்கு Register of Holdings (RH Register)-ல் 1) யார், யார் பெயரில் 2) விற்றவர் - வாங்கியவர்கள் 3) செட்டில்மெண்ட் 4) தானம் 5) கிரையம் 6) ஈட்டுக்கடன் பத்திரங்கள்

பற்றிய அனைத்து விபரங்கள் முழுமையாக சான்றிட்ட நகல்களாக வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.க.பெரியசாமி அவர்கள் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.தி.பிரகாஷ்குமார், சார்பதிவாளர், வேப்பந்தட்டை சார்பதிவகம், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 13/01/2025 மற்றும் 20/02/2025 தேதிகளிட்டு பதில் அனுப்பி அதில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், வட்டாட்சியர், வேப்பந்தட்டை வட்டம் அவர்கள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்படும் ஆவணங்களை ஏற்பதில்லை என விவரித்தார். மனுதாரரின் கோரிக்கை என்பது தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டது குறித்ததாகும்.

**3. எனவே, மனுதாரர், வருவாய் துறை தொடர்பான குறைதீர் கோரிக்கைக்கு, ஒரு புகார் மனுவை வருவாய் துறையினரிடம் அளிக்க வேண்டுமென்றும், அதனை தகுதி வாய்ந்த அலுவலர் பெற்று தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. வேப்பந்தட்டை சார்பதிவகத்தைப் பொறுத்தவரையில், மனுதாரர், 13/08/2026 அன்று காலை 11.00 மணிக்கு பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்றும், அங்கு சார்பதிவாளர், இணையதளம் வாயிலாக மனுதாரர் கோரும் ஆவணங்களைப் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்வதற்கு மனுதாரருக்கு தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதோடு, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், வேப்பந்தட்டை வட்டம் அவர்களிடம் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதற்காக, எவ்வித குறிப்பிட்ட காரணங்களுமின்றி, பொத்தாம் பொதுவாக அவற்றை ஏற்க இயலாது எனக் கூறுவது சரியானதல்ல என அறிவுறுத்தப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், வேப்பந்தட்டை சார்பதிவகம், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் 13/08/2026-லிருந்து ஒரு வார காலத்திற்குள் இப்பொருண்மை குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1084/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
வேப்பந்தட்டை சார்பதிவகம்
பெரம்பலூர் மாவட்டம் - 621 116.

2.வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
வேப்பந்தட்டை வட்டம்
பெரம்பலூர் மாவட்டம்.

**புகார்தாரர்**

திரு.க.பெரியசாமி
த/பெ.கணேசன் உடையார்
பிள்ளையார் கோவில் தெரு
பெரிய வடகரை அஞ்சல்-621 116
Phone:97511 01455.

RG/Sr.PC